FIRST INFORMATION REPORT

(Under Section 173 BNSS)
(பா.கு.பா.ச பிரிவு 173 இன் கீழ்)

முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM I

C 8101930

1. District : Virudhunagar PS: Vigilance and Anti Corruption Year: 2025 FIR No.: 11/2025 Date: 02.12.2025
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: PC Act 1988 as Amended in 2018 Sections பிரிவுகள்: u/s 7

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to : 07.12.2024,
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை 10.11.2025 at 10.00 hrs.

Time Period : Time from : Time to : 02.12.2025 at 12.00 hrs.
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : Time :
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 02.12.2025 நேரம் 16.00 hrs

(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 02.12.2025 நேரம் 16.00 hrs

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக In typing

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் About 35 Kms and 25 Kms / East

Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி காரியாபட்டி மற்றும் மல்லாங்கிணர் பேரூராட்சி அலுவலகங்கள்

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : (b) Father's/ Husband's Name :
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு.N.பழனிக்குமார் தந்தை / கணவர் பெயர் திரு.நெடுமாறன்

(c) Date / Year of Birth : (d) Nationality : (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு 22.09.1982 நாட்டினம் Indian வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : (g) Address :
தொழில் ஒப்பந்ததாரர் முகவரி M/s.பவதாரணி பில்டர்ஸ்/ பங்குதாரர்
பொதுப்பணித்துறை ஒப்பந்ததாரர்,
எண்.64, பசுபதி தெரு, ஜீவா மெயின் ரோடு,
செல்லூர், மதுரை-2

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு.கணேசன், இளம் பொறியாளர், காரியாபட்டி பேரூராட்சி, காரியாபட்டி, விருதுநகர் மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
- தாமதம் இல்லை -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு — Not arise

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : — Not arise
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுகிறது.

நான் இன்று 02.12.2025 மாலை 16.00 மணியளவில் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, மதுரை, செல்லூர், ஜீவா மெயின்ரோடு, பசுபதி தெருவில் கதவு எண்.64 என்கிற முகவரியைச் சேர்ந்த திரு.நெடுமாறன் என்பவரின் மகன் திரு. பழனிக்குமார் என்பவர் என் முன்பாக ஆஜராகி விபரம் சொல்லி கொடுத்த புகாரை பெற்று அதை படித்துப்பார்த்து, மேலும் அவரிடம் விபரம் கேட்டு தெரிந்து கொண்டேன். உடன் அந்த புகார் தொடர்பாக இரகசிய விசாரணை செய்ததில், எதிரி மீது எதிர்மறையான குறிப்புகள் இருந்ததாலும், வாதி மீது நம்பகத்தன்மையான குறிப்புகள் இருந்ததாலும், வழக்குப்பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருந்ததாலும், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, தென் சரக, காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு வாய்மொழியாக தகவல் தெரிவித்துவிட்டு, இன்று 02.12.2025 இரவு 19.00 மணிக்கு காலம் 7-இல் கண்ட எதிரி திரு.கணேசன், இளம் பொறியாளர், காரியாபட்டி பேரூராட்சி, காரியாபட்டி, விருதுநகர் மாவட்டம்

/தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது/

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முத.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

02/12/2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

02.12.2025

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

K.RAMACHANDRAN

Name: பெயர் ..... ADSP/ASC/VNR(Gr)
Rank: நிலை .....No. எண் .....

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

03.12.2025 at 08.45 hrs.

விருதுநகர் மாவட்ட ஊ.த.க.பிரிவு குற்ற எண்.11/2025 பிரிவு 7 of Prevention of Corruption Act 1988 as amended in 2018-இன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி

என்பவர் மீது விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.11/2025 சட்டப்பிரிவு 7 of Prevention of Corruption Act 1988 as amended in 2018-இன்படி வழக்குப்பதிவு செய்தேன். வாதி திருமதி.N.பழனிக்குமார் என்பவரது புகார் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர் N.பழனிக்குமார், வயது 42, த/பெ.நெடுமாறன், M/s.பவதாரணி பில்டர்ஸ் பங்குதாரர்/ பொதுப்பணித்துறை ஒப்பந்ததாரர், எண்.64, பசுபதி தெரு, ஜீவா மெயின் ரோடு, செல்லூர், மதுரை-2. பெறுநர் உயர்திரு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு பிரிவு அலுவலகம், விருதுநகர். ஐயா, நான் மதுரை, செல்லூர், பசுபதி தெருவில் மனைவி மற்றும் குழந்தைகளுடன் குடியிருந்து வருகிறேன். அதே வீட்டில் என்னுடைய பெயரிலும், என்னுடைய மனைவி திருமதி.பாண்டிமீனா பெயரிலும் பவதாரணி பில்டர்ஸ் என்ற பெயரில் பொதுப்பணித்துறை (நீர்வளத்துறை) முதல்நிலை ஒப்பந்ததாரராக பதிவு செய்து தொழில் செய்து வருகிறேன். எங்களுடைய பவதாரணி பில்டர்ஸ் என்ற நிறுவனத்தின் பெயரில் காரியாபட்டி பேரூராட்சி வார்டு எண்.10 அரசு பணியாளர் குடியிருப்பு பகுதி மயானத்தில் 2022-2023 KNMT (கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம்) திட்ட நிதி ரூ.1,38,00,000/- (ஒரு கோடியே முப்பத்து எட்டு லட்சம் ரூபாய்) மதிப்பீட்டில் நவீன எரிவாயு தகனமேடை அமைக்கும் பணியினை செய்ய முறைப்படி ஒப்பந்தப்புள்ளி அளித்தேன். அதன்பேரில் எங்களது நிறுவனத்திற்கு காரியாபட்டி பேரூராட்சி செயல் அலுவலரால் Roc.No.103/2022, dated 25.07.2022-ன்படி மேற்படி பணியை செய்ய வேலை உத்தரவு வழங்கப்பட்டது. அந்த வேலை உத்தரவின்பேரில், முறைப்படி காரியாபட்டி பேரூராட்சி EO-விடம் வேலை ஒப்பந்தம் செய்து, மேற்படி எரிவாயு தகனமேடை பணியை செய்து முடித்தேன். அந்த பணிக்குரிய பில் தொகையில் பிடித்தங்கள் போக மீதித்தொகையை எங்களது நிறுவனத்தின் பெயரில் வழங்குவதற்கு காரியாபட்டி பேரூராட்சி JE திரு.கணேசன் என்பவர் பகுதி பகுதியாக பில்லை தயார் செய்து, மதுரை மண்டல பேரூராட்சிகளின் AEE-க்கு அனுப்பி ஒப்புதல் பெற்று, காரியாபட்டி பேரூராட்சி அலுவலகத்தில் வழங்குவார். அதன்பேரில் காரியாபட்டி பேரூராட்சி EO-ஆல் பில் தொகையில் பிடித்தங்கள் போக மீதித்தொகையானது எங்களது நிறுவனத்தின் பெயரில் காசோலையாகவோ அல்லது வங்கி கணக்கு மூலமாகவோ பணப்பரிமாற்றம் செய்து வழங்கப்படும். அவ்வாறு மேற்படி பணிக்குரிய ஒவ்வொரு பகுதி பில்லையும் தயார் செய்து, மதுரை மண்டல பேரூராட்சிகளின் AEE-க்கு அனுப்பி ஒப்புதல் பெற்று காரியாபட்டி பேரூராட்சி EO-விடம் வழங்குவதற்கு காரியாபட்டி பேரூராட்சி JE திரு.கணேசன் என்பவர் ஒவ்வொரு தடவையும் லட்சக்கணக்கில் லஞ்சமாக பணம் கேட்டார். அவ்வாறு லஞ்சப்பணம் கேட்டபோதெல்லாம், அவருக்கு லஞ்சப்பணம் கொடுக்க விருப்பமில்லாமல்,

பேரூராட்சிகளின் உயரதிகாரிகளுக்கும், முதலமைச்சரின் தனிப்பிரிவிற்கும் மனுக்களை அனுப்பி, எங்களது நிறுவனத்தின் பெயரில் பெற வேண்டிய பில்தொகைகளை எந்தவித லஞ்சப்பணமும் கொடுக்காமல் காரியாபட்டி பேரூராட்சி அலுவலகத்திலிருந்து மூன்று பகுதி பில்களாக பிடித்தங்கள் போக மீதித்தொகையை மொத்தம் ரூ.1,14,48,160/- (ஒரு கோடியே பதினான்கு லட்சத்து நாற்பத்தெட்டாயிரத்து நூற்று அறுபது ரூபாய்) எங்களது நிறுவனத்தின் பெயரிலுள்ள வங்கி கணக்கு மூலமாக பெற்றுக்கொண்டேன். இறுதியாக கடந்த 07.12.2024 அன்று காரியாபட்டி பேரூராட்சி அலுவலகம் சென்று JE திரு.கணேசன் என்பவரை சந்தித்தபோது, மேற்படி பணியை முடித்ததற்குரிய பணி முடிவறிக்கையை தயார் செய்து, மதுரை மண்டல பேரூராட்சிகளின் AEE, மதுரை மண்டல பேரூராட்சிகளின் EE மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநரக கண்காணிப்பு பொறியாளர் ஆகியோர்களுக்கு அனுப்பி ஒப்புதல் பெற்று காரியாபட்டி பேரூராட்சி EO-விடம் வழங்குவதற்கும், இறுதி கிளைம் பில்லாக பிடித்தங்கள் போக மீதித்தொகை ரூ.19,34,124/-க்குரிய (பத்தொன்பது லட்சத்து முப்பத்து நான்காயிரத்து நூற்று இருபத்தி நான்கு ரூபாய்) பில்லை தயார் செய்து, மதுரை மண்டல பேரூராட்சிகளின் AEE-க்கு அனுப்பி ஒப்புதல் பெற்று காரியாபட்டி பேரூராட்சி EO-விடம் வழங்குவதற்கும் ரூ.3,50,000/- பணத்தை லஞ்சமாக கேட்டார். அப்போதும் அவருக்கு லஞ்சமாக பணம் கொடுக்க எனக்கு விருப்பமில்லாமல், முதலமைச்சரின் தனிப்பரிவிற்கு புகார் மனுவை அனுப்பி வைத்தேன். அந்த புகார் மனுவிற்கு கடந்த 06.10.2025 அன்று காரியாபட்டி பேரூராட்சியின் செயல் அலுவலரிடமிருந்து பணி முடிவறிக்கை பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று பதில் கடிதம் வந்தது. அதன்பிறகும் காரியாபட்டி பேரூராட்சி அலுவலகத்திலிருந்து எந்தவித தகவலும் இல்லை. எனவே கடந்த 07.10.2025 அன்று சென்னை ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு இயக்குநரகத்திற்கு ஒரு புகார் மனு அனுப்பினேன். அதில், என்ன செய்வதென்று தெரியாமல், எப்படியாவது மேற்படி JE திரு.கணேசனுக்கு லஞ்சப்பணம் கொடுக்காமல் காரியாபட்டி பேரூராட்சி அலுவலகத்திலிருந்து பணி செய்ததற்குரிய பிடித்தங்கள் போக மீதமுள்ள இறுதி பில் தொகையை பெறவேண்டும் என்ற எண்ணத்தில் மிகைப்படுத்தி கூறியிருந்தேன். அந்த மனுவை மேல்நடவடிக்கைக்காக பேரூராட்சிகளின் இயக்குநரகத்திற்கு அனுப்பி வைத்துள்ளதாக சென்னை ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு இயக்குநரகத்திலிருந்து பதில் கடிதம் எனக்கு கிடைத்தது. அதன்பின்பும் காரியாபட்டி பேரூராட்சி அலுவலகத்திலிருந்து எந்த தகவலும் வராததால், கடந்த 10.11.2025ஆம் தேதி காலை சுமார் 10.00 மணியளவில் காரியாபட்டி பேரூராட்சி அலுவலகத்திற்கு சென்று, அங்கிருந்த JE திரு.கணேசன் என்பவரை சந்தித்து, மேற்படி பணிக்குரிய பணிமுடிவறிக்கை மற்றும் இறுதி கிளைம் பில் சம்மந்தமாக கேட்டேன். அப்போது அவர், என்னிடம் பணி முடிவறிக்கை தயார் செய்து ஒப்புதல் வாங்க வேண்டிய அதிகாரிகளிடம் கையெழுத்து வாங்கிட்டேங்க, ஆனா இறுதி கிளைம் பில் இன்னும்

தயார் செய்யல, ஏற்கனவே மூன்று பகுதி பில்கள் தயார் செய்து மதுரை மண்டல பேரூராட்சிகளின் உதவி செயற்பொறியாளருக்கு அனுப்பி ஒப்புதல் பெற்று காரியாபட்டி பேரூராட்சி செயல் அலுவலரிடம் வழங்கியதற்கு ரூ.3,50,000/- செலவுக்கு கேட்டேன், நீங்க இதுவரைக்கும் எந்த பணமும் கொடுக்காம, என்மேல பெட்டிசன் மேல பெட்டிசனா அனுப்பி உங்களுக்கு இன்றுவரை கிடைக்க வேண்டிய பணத்தை காரியாபட்டி பேரூராட்சி அலுவலகத்திலிருந்து வாங்கிகிட்டீங்க, இந்த தடைவயாவது நான் ஏற்கனவே கேட்ட ரூ.3,50,000/- பணத்தை கொண்டு வந்து கொடுங்க, இந்த இறுதி கிளைம் பில்லை நான் தயார் செய்து, மதுரை மண்டல பேரூராட்சிகளின் AEE-க்கு அனுப்பி ஒப்புதல் பெற்று காரியாபட்டி பேரூராட்சி EO-விடம் வழங்குகிறேன் என்று கூறி அனுப்பிவைத்தார். அதன்பின்பு, இன்று (02.12.2025) காலை சுமார் 11.30 மணிக்கு காரியாபட்டி பேரூராட்சி அலுவலகம் சென்றபோது, அங்கு JE திரு.கணேசன் இல்லாததால், விசாரித்ததில் அவர் மல்லாங்கிணர் பேரூராட்சி அலுவலகத்திற்கு சென்றுள்ளதாக தெரிவித்தனர். ஆகையால் மல்லாங்கிணர் பேரூராட்சி அலுவலகத்திற்கு மதியம் சுமார் 12.00 மணியளவில் சென்று, அங்கிருந்த JE திரு.கணேசனை சந்தித்து, என்னுடைய இறுதி கிளைம் பில் சம்மந்தமாக கேட்டபோது, என்னங்க, எங்கங்க நான் கேட்ட பணம் ரூ.3,50,000/-, கொண்டு வந்திருக்கீங்களா என்று கேட்டார். அப்போது நான் அவரிடம், சார் தொழில் ரொம்ப மோசமா இருக்கு, வட்டிக்கு வாங்கித்தான் இந்த வேலைய செஞ்சேன், இங்கேயே நெறைய பணம் முடங்கிடுச்சு, இப்போதைக்கு என்னால ஒத்த ரூபாய் கூட கொடுக்க இயலாது என்று சொன்னேன். அதற்கு அவர் என்னிடம் ரூ.50,000/- பணத்தையாவது முதலில் ரெடி பண்ணி கொண்டு வந்து கொடுங்க, நீங்க செய்த பணிக்குரிய இறுதி கிளைம் பில்லை தயார் செய்து நடவடிக்கை எடுக்கிறேன், இறுதி கிளைம் பில் தொகை வந்தபிறகு, நான் கேட்ட பணத்தில் எனக்கு தர வேண்டிய மீதி ரூ.3,00,000/- பணத்தை கொடுங்க என்றும், இந்த ரூ.50,000/- பணத்தை கொண்டு வந்து கொடுத்தால்தான், நீங்க செய்த பணிக்குரிய இறுதி கிளைம் பில்லை தயார் செய்து நடவடிக்கை எடுப்பேன் என்று கண்டிப்பாகவும், கராறாகவும் கூறினார். வேறு வழியில்லாமல் அப்போது அவரிடம் சரியென்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். என்னிடம், என்னுடைய நிறுவனத்தின் பெயரில் செய்த பணிக்குரிய இறுதி கிளைம் பில்லை தயார் செய்து நடவடிக்கை எடுக்க ரூ.3,50,000/- பணத்தை லஞ்சமாக கேட்டு, அதில் முன்பணமாக ரூ.50,000/- பணத்தை லஞ்சமாக கேட்ட காரியாபட்டி பேரூராட்சி JE திரு.கணேசன் என்பவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, (sd) N.Palanikumar 02/12/2025 (N.PALANIKUMAR) Sir, Received the complaint on 02.12.2025 at 16.00 hrs. The genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused

was also verified through sources and found bad. Found prima-facie for the allegation of the complainant. Since the registration of regular case is warranted. The matter is intimated to the SP/SR, V&AC, Chennai and registered a case in Viruthunagar V&AC Cr.No.11/2025 u/s 7 of the P.C Act 1988 as amended in 2018 on 02.12.2025 at 19.00 hrs and took up for investigation. (Sd) K.Ramachandran 02.12.2025 (K.RAMACHANDRAN) ADSP/V&AC/VNR (OD).

The original FIR along with original complaint is submitted to the court of the Principal District and Sessions Judge cum Special Judge for P.C. Act cases, Virudhunagar District at Srivilliputhur and copies submitted to the concerned officers.

02-12-2025
(K.RAMACHANDRAN)
ADSP/V&AC/VNR (OD).